**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 161 of 2023 |
| Prosecution Witness | : | PW5 |

24.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரகாந்த் | Calling | : உதவி ஆய்வாளர் |
| Father Name | : ராஜேந்திரன் | Religion | : |
| Village | : திருச்சி | Age | : 37 |
| Taluk | : | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மத்திய மண்டலம் காவல் துறை தலைவர் அலுவலகத்தில் அயல்பணியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2022 அன்று துறையுர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொருப்பில் இருந்தபோது திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கதிரேசன் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த அவரது மனைவி செல்வமணி என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று துறையூர் காவல் நிலைய குற்ற எண் 318/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

2. பின்னர் அன்றைய தினமே காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன், ரஞ்சித்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

3. பின்னர் சாட்சிகள் செல்வமணி, கண்ணன், கிருஷ்ணமூர்த்தி, வேணுகோபால், மணிகண்டன், ரஞ்சித்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில்

காயம்பட்ட திருச்சி அரசு மருத்தவமனையில் சிகிச்சையில் இருந்தவர் இறந்துவிட்டார் என்று தகவல் கிடைத்ததால், இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இதசவிலிருந்து 279, 304 ஏ வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு திருச்சி அரசு மருத்துவனையில் சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்துபோன கதிரேசன் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன். பின்னர் சாட்சிகளாள பால்ராஜ், மணிகண்டன், பன்னீர்செல்வம், செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து மேல்விசாரணைக்கு காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொதுவாக தீபாவளிக்கு முதல் நாளும், மறுநாளும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எனவே வாகனங்கள் மெதுவாக செல்லும் என்றால் சம்பவ சாலை பைபாஸ் என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்காது. சம்பவ இடத்திற்கும், துறையூர் அரசு மருத்துவமனைக்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். தகவல் கிடைத்து திருச்சி அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் 25.10.2022ம் தேதி விடியற்காலை 04.00 மணிக்கு. மேற்படி புகார் பெற்ற நேரத்தை குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை. சம்பவத்தன்றே சம்பவ இடத்தை பார்த்தேன். அதனால் புகார் பெற்றவுடன் மறுநாள் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன். சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று ஞாபகம் இல்லை. துறையூர் – பெரம்பலூர் சாலை இரண்டு வழி சாலை. மேற்படி சாலையில் இரண்டு புறமும் நடைபாதை உள்ளது. மேற்படி சாலையின் நடுவே வெள்ளை கோடு உள்ளது. துறையூரில் இருந்து பெரம்பலூர் சாலையில் இடது புறமாகவும், பெரம்பலூரில் இருந்து வரும்போது வலது புறமாகவும் வரவேண்டும். மேற்படி சாலையில் இருசக்கர வாகனம் செல்வதற்கு தனியாக ஒரு பகுதி உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை. சம்பவ இடத்திற்கு அருகில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் தெரியாது. வரைபடத்தில் சாலையின் அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவருக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்று ஆவணத்தில் குறிப்பிடவில்லை. எதிரி வந்த வாகனத்தில் இருந்தவர்கள் சாட்சியாக சேர்க்கவில்லை. சாட்சிகளை காவல் நிலையத்தில் விசாரித்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர்,
துறையூர்